சாத்தியாறு அணைக்கட்டைச் சுற்றுலா நிலையமாக்கல்

* 434 வினு—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், சாத்தியாறு அணைக்கட்டைச் சுற்றுலா நிலையமாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இல்லை.

திரு. பி. எஸ். மணியன்: தலைவர் அவர்களே, மதுரை நகரத்தின் அருகாமையில், பதினைந்து மைல் தூரத்தில், முற்றிலும் இனிமையான சூழ்நிலையிலிருக்கும் இடம் சாத்தியாறு அணைக்கட்டு. இது அழகர் கோவிலிலிருந்து ஆறு மைல் தூரத்தில் உள்ளது. நம்முடைய அமைச்சரவையிலிருக்கும் மாண்புமிகு அமைச்சர்களில் நான்கு அமைச்சர்கள் அந்த இடத்திற்கு வந்திருந்து அந்த இடத்தின் சூழ்நிலையைப் பாராட்டியிருக்கிறார்கள். ஆகவே அந்த இடத்தைச் சுற்றுலா நிலையமாக மாற்ற அரசு ஆராய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தியாறு அணைக்கட்டு நல்ல சூழ்நிலையில், ரம்யமான இடத்திலிருக்கிற தென்பது உண்மை. அதைச் சுற்றுலா நிலையமாக்குவதற்கு நம்முடைய தலைமைப் பொறியாளரிடம் திட்டம் தீட்டும்படி கேட்டுக் கொண்ட நேரத்தில் இரண்டு லட்சத்தி நாற்பதாயிரம் ரூபாய் தேவைப்படுமென்று சொன்னார்கள். இந்த ஆண்டு நிதி நிலை இடம் தராததால் எடுத்துக் கொள்ளப்படவில்லை. 1972–73-ல், இரண்டாவது பாகத் திட்டமாக எடுத்துக் கொள்ள அரசு உத்தேசித்திருக்கிற தென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Rest house at Chittanna Vasal

* 435 Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state:

(a) whether the Government has any proposal to construct a rest house at Chittanna Vasal for the benefit of the tourists; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இராசாராம்: இல்லை.

Half ticket system for children in State Transport Buses

* 436 Q. Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Transport be pleased to state:

(a) whether the Government has any propsal to introduce half ticket system to children in State Transport buses; and

(b) if so, the details thereof?

[1971 ஜூலை 24]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) & (இ) மாவட்ட வழித்தடங்களிலும், நெடுந்தொலைவு (விரைவு) பணிகளிலும் செல்லும் அரசுப் போக்குவரத்துத்துறைப் பேருந்துகளில் சிறுவர்களுக்கு அரைக்கட்டணம் வசூலிக்கும் முறை வழக்கத்திலுள்ளது. நகரப் பணிகளில் செல்லும் பேருந்துகளில் இம்முறை வழக்கத்தில்லை. நகரப் பணிகளில் செல்லும் பேருந்துகளில் இம்முறையைக் கொண்டுவர உத்தேசிக்கவும் இல்லை.

DR. H.V. HANDE : Is it not a fact that in the month of March last year the Hon. Chief Minister had assured in this House, when I had raised the same question, that it would be sympathetically considered and all the necessary matters would be investigated and then a decision would be taken? May I know from the Hon. Minister whether all the details about these half tickets to children less than 12 years have been considered and taken into consideration by this Government and what are the reasons which prompted them to drop this idea which was originally kept in a nebulous stage by this Government?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாவட்ட வழித் தடங்கள்களிலும் நீண்டதூர பேருந்துகளிலும் அதிகக் கட்டணமிருக்கின்ற காரணத்தால், குழந்தைகளுக்கும் இளைஞர்களுக்கும் அரைக்கட்டணம் வாங்குவது உண்மையிலேயே பயனுள்ளதாயிருக்கும். ஆனால் நகர்ப்புறங்களிலும் புற நகர்ப்புறங்களிலும் அதிகபட்சம் போனால் 20 காசு, 25 காசு என்ற அளவில் தான் கட்டணம் இருக்கிறது. அதற்கு மேலில்லை. அதிலே அரைக் கட்டணம் போட்டு ரேஷனலைசேஷன் பண்ணுவது முழு கட்டண அளவுக்கு வந்துவிடுகிறது. ஆகவே அந்தப்படி அரைக் கட்டணச் சலுகை அதிகப் பலன் கொடுப்பதில்லை. நகர்புற, பெருநகர் புறங்களில் இந்த மாதிரி பயணம் செய்கின்றவர்கள் பெருமளவில் பணி செய்கின்றவர்கள் செல்வதால் அதிகப் பலனில்லை என்று அரசு நம்புகிறது.

திரு. முனு ஆதி: தலைவர் அவர்களே, இதிலே ஒரு சந்தேகம். அரை டிக்கட்கள் வீதம் 60 பேர்களைத்தான் பேருந்துகளிலே ஏற்றலாமா அல்லது 120 அரை டிக்கட்களை ஏற்றலாமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அரை டிக்கட் என்பது கட்டணத்திற்குத்தானே தவிர இடத்திற்கு அல்ல.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே 5 அல்லது 6 வயது என்று இருந்தால் அரைக் கட்டணம் வசூலிக்கிறார்கள். 3 வயதிற்குக் குறைந்தவர்களுக்குக் கட்டணம் இல்லை. ஒரு சிலர் 7, 8 குழந்தைகளோடு வருகிறார்கள். அப்படியில்லாமல் ஒரு சீலிங் வைத்து ஒரு பாஸஞ்சர் ஒரு குழந்தையை அல்லது 2 குழந்தைகளைத்தான் கொண்டுவரலாம் என்று அரசாங்கம் உத்திரவு போடுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இதிலே உச்சவரம்பு கட்டுவதற்கு உத்தேசம் இல்லை.